

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (3.8.2023) போரூர் ஏரியில் ரூ.100 கோடி மதிப்பீட்டில் புதிய மதகு அமைத்தல் மற்றும் போரூர் ஏரி முதல் இராமாபுரம் ஓடை வரை புதியதாக மூடிய வடிவிலான கால்வாய் அமைக்கும் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, துணை மேயர் மு. மகேஷ் குமார், நீர்வளத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சந்தீப் சக்சேனா, பெருநகர சென்னை மாநகராட்சி கூடுதல் தலைமைச் செயலாளர் / ஆணையர் மரு. ஜெ. ராதாகிருஷ்ணன், இணை ஆணையர் (பணிகள்) டாக்டர் ஜி.எஸ். சமீரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (3.8.2023) பழவந்தாங்கல் காவல் நிலையத்திற்கு நேரில் சென்று திடீர் ஆய்வு மேற்கொண்டு, பதிவேடுகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (3.8.2023) அசோக் நகர் 4வது நிழற்சாலை மற்றும் அதனை சார்ந்த பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, துணை மேயர் மு.மகேஷ் குமார், பெருநகர சென்னை மாநகராட்சி கூடுதல் தலைமைச் செயலாளர் / ஆணையர் மரு.ஜெ. ராதாகிருஷ்ணன், இணை ஆணையர் (பணிகள்) டாக்டர் ஜி.எஸ்.சமீரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (3.8.2023) வட அமெரிக்க ஈரோடு தமிழன்பன் வாசகர் பேரவை தயாரித்துள்ள, ஈரோடு தமிழன்பன் அவர்களின் வாழ்க்கை வரலாறு குறித்த “மகாகவி” என்ற ஆவணப் படத்தை வெளியிட்டார். உடன் கவிஞர் ஈரோடு தமிழன்பன், ஆவணப்பட இயக்குநர் அமீர்அப்பாஸ், தி.அமிர்தகணேசன், கவிஞர் கவிமுகில், தமிழ்நாடு திரைப்படப் பாடலாசிரியர் சங்கத் தலைவர் கவிஞர் தமிழமுதன், விழிகள் பதிப்பகம் தி.நடராசன் ஆகியோர் உள்ளனர்.

